# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2096/17 - 2018 නොවැම්බර් මස 05 වැනි සඳුදා - 2018.11.05

*2096/17 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 05 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 43 ஆவது உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர்களுக்கு ஒப்படைக்கப்படும் விடயங்கள், பணிகள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் ஆகியவை தீர்மானிக்கப்பட்டுள்ளதாதலால்;

அவ் அமைச்சர்களின் பொறுப்பிலுள்ள விடயங்கள், பணிகள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் என்பன இவ்வறிவித்தல் வெளியாகும் திகதியிலிருந்து, கீழ் தரப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு அமைந்திருக்குமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மைத்திரிபால சிறிசேன,**
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2018, நவெம்பர் 05.


1A-G 28502 - 372 (2018/11)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

**(1) பாதுகாப்பு அமைச்சர்**

| நிரல் I<br>கடமைகளும் பணிகளும் | நிரல் II<br>திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும் | நிரல் III<br>நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
|---|---|---|
| 1. அரச பாதுகாப்பு தொடர்பிலான விடயத்துடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும் | 1. இலங்கைத் தரைப்படை | • தரைப்படைச் சட்டம் (1949 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க) |
| 2. பாதுகாப்புச் சேவைகளின் கடமைகளை இலகுவாக்குவதன் மூலம் நாட்டில் பாதுகாப்பை ஏற்படுத்துதல் | 2. இலங்கைக் கடற்படை | • கடற்படைச் சட்டம் (1950 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க) |
| 3. உள்ளகப் பாதுகாப்பைப் பேணுதல் | 3. இலங்கை வான்படை | • வான்படைச் சட்டம்(1949 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க) |
| 4. அரசாங்க, உள்ளக பாதுகாப்பு தொடர்பிலான புலனாய்வுச் சேவைகளைப் பேணுதல் | 4. சிவில் பாதுகாப்புத் திணைக்களம் | • (2008ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க) அப்பிவெனுவென் அப்பி நிதியச் சட்டம் |
| 5. நேசநாட்டுப் படைகளுடனான உறவுகள் | 5. சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் | • (2009ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க) பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரிச் சட்டம் |
| 6. சர்வதேச மனிதாபிமான நடவடிக்கைகளுக்காக ஒத்துழைப்பு வழங்குதல் | 6. பாதுகாப்புச் சேவைகள் கட்டளை, பதவிநிலைக் கல்லூரி | • (2008ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க) பாதுகாப்புச் சேவைகள் ஆணை மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரிச் சட்டம் |
| 7. முதிர்ந்த போர்வீரர்கள், ஊனமுற்ற படைவீரர் தொடர்பான அலுவல்கள் | 7. ரணவிருசேவை அதிகார சபை | • (2009ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க) கரையோரப் பாதுகாப்புத் திணைக்களச் சட்டம் |
| 8. வெடிமருந்துகளும் சுடுபடைக்கலன்களும் தொடர்பான அலுவல்கள் | 8. பாதுகாப்புச் சேவைகள் பாடசாலை | • (1956 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க) வெடிப்பொருட்கள் சட்டம் |
| 9. வெளிச்ச வீடுகளின் பராமரிப்பு (துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான வெளிச்சவீடுகள் தவிர்ந்த) தொடர்பான செயற்பாடுகள் | 9. தேசிய பயிலிளவல் சிறப்பணி | • (1916 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) சுடுபடைக்கலன்கள் சட்டம் |
| 10. பாதுகாப்புச் சேவை ஆளணியினருக்கு பாதுகாப்புக் கல்வியும் பின்னைய சேவைக் கல்வியும் பெற்றுக் கொடுத்தல் | 10. தேசிய பாதுகாப்பு நிதியம் | • (1951 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) துப்பாக்கிச்சூட்டு வீச்சிடங்கள் மற்றும் இராணுவப் பயிற்சிச் சட்டம் |
| 11. பாதுகாப்புச் சேவை ஆளணியினருக்கான உயர்கல்வியைப் பெற்றுக்கொடுத்தல் | 11. அரச இரகசிய தகவல் சேவை | • (1985ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க) பயன்பாடுகள் மற்றும் குறைநிரப்புச் சட்டம் |
| 12. தனியார் பாதுகாப்புச் சேவைகள் தொடர்பிலான அலுவல்கள் | 12. இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம் | |
| | 13. லங்கா லொஜிஸ்ரிக்ஸ் லிமிட்டட் | |
| | 14. ரக்னா ஆரக்சன லங்கா லிமிட்டட் | |
| | 15. பொலிஸ் திணைக்களம் | |
| | 16. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை | |
| | 17. தேசிய ஊடக மத்திய நிலையம் | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

*(1)* **பாதுகாப்பு அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 13. மீட்பு நடவடிக்கைகளும் கரையோரப் பாதுகாப்புச் சேவைகளின் நிருவாகமும் | | • (1966 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் சட்டம் |
| 14. புறத்தொப்படைத்தல் தொடர்பான அலுவல்கள் | | • (2001 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க) கடற்கொள்ளைச் சட்டம் |
| 15. சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுதல் | | • (1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க) பயங்கரவாதத் தடைச் சட்டம் |
| 16. சமூக ஒழுக்கத்தை உறுதிப்படுத்தும் விரிவான சீர்திருத்தங்களையுடைய உபாயமார்க்கங்களை நடைமுறைப்படுத்துதல் | | • (1998 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க) தனியார் பாதுகாப்பு முகவர் நிலையங்கள் சட்டம் |
| 17. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஆலோசனையின்படி பொலிஸ் சேவையின் வினைத்திறனை மேம்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் | | • (1947 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க)பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் |
| 18. சமூகச் சீரழிவாக மாறியுள்ள பல்வேறான குற்றங்கள் மற்றும் சமூக விரோத செயற்பாடுகளைத் தடுப்பதற்கும் தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் | | • (1999 ஆம் ஆண்டின் 54ஆம் இலக்க) ரணவிரு சேவை அதிகாரசபைச் சட்டம் |
| 19. வாகனப் போக்குவரத்துக் கட்டுப்பாடு | | • (1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க) சேர் ஜோன் கொத்தலாவல அரச பாதுகாப்பு பயிற்சி நிறுவனச் சட்டம் |
| 20. அபாயகர ஔடதங்களின் பாவனையின் தடுப்பும் கட்டுப்பாடும் | | • (1999 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) பயங்கரவாதிகளின் குண்டுத் தாக்குதல்களை அடக்குதல் சட்டம் |
| 21. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்கான நடவடிக்கைகளும் | | • (2000 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க)கடல்சார் கடற்செலவின் பாதுகாப்புக்கெதிரான சட்டமுறையற்ற செயல்களை அடக்குதல் சட்டம் |
| 22. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களைக் கண்காணித்தல் | | • (1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க) புறத்தொப்படைத்தல் சட்டம் |
| | | • (1865 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க) பொலிஸ் கட்டளைச் சட்டம் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(1) பாதுகாப்பு அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br>*கடமைகளும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| | | • (2008 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க) போதையூட்டும் ஔடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான வியாபாரத்திற்கும் எதிரான சமவாயங்கள் சட்டம்<br>• (2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க) ஔடதங்களுக்கு அடிமையான ஆட்கள் (சிகிச்சை அளித்தலும் புனர் வாழ்வளித்தலும்) பற்றிய சட்டம்<br>• தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைச் சட்டம் (1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க)<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டு வரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

***(2) மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர்***

| *நிரல் I*<br>*கடமைகளும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| 1. மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2. மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தல் | 1. ஸ்ரீ லங்கா மகாவலி அதிகாரசபை (வரையறுக்கப்பட்ட மகாவலி லைவ்ஸ்டொக் என்டர்பிரைஸஸ் தவிர்ந்த)<br>2. மொரகஹகந்த மற்றும் களுகங்கை நீர்த்தேக்க கருத்திட்டம்<br>3. குளங்களின் அணைகளைப் பாதுகாத்தல், நீர்வளங்கள் திட்டமிடல் கருத்திட்டம் | • (1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) ஸ்ரீ லங்கா மகாவலி அதிகார சபைச் சட்டம்<br>• காடுகள் கட்டளைச் சட்டம் (453 ஆம் அத்தியாயமான)<br>• (1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டம்<br>• (1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க) தேசிய சூழல் சட்டம் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

*(2)* **மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர்** *(தொடர்ச்சி)*

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

3. மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களும் அதன்கீழ் தாபிக்கப்பட்ட அமைப்புகளுடன் சம்பந்தப்பட்ட அலுவல்களும்
4. தற்கால மற்றும் எதிர்கால சந்ததியினருக்காக சுற்றாடலை பாதுகாப்பதற்காக தேசிய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை வளர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்
5. வலுவாதார அபிவிருத்திக்காக ஆதரவளித்தல்
6. சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமை பற்றிய கொள்கைகளையும் திட்டங்களையும் வகுத்தமைத்தல்
7. காடுகளும் காட்டியலும்
8. காடுகள், வனவிலங்குகள், மாவடை மரவடை ஆகியவற்றின் பாதுகாப்பும் பேணுகையும்
9. நாட்டின் மரங்களின் தேவையைப் பூர்த்திசெய்யும் நோக்கில் வணிக ரீதியான பயிர்ச்செய்கையை ஊக்குவித்தல்
10. சுற்றாடல் மாசடைவதை தடுப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் பயனுறுதிவாய்ந்த செயற்படுத்துகையும்
11. கடல் மாசுறல் தடுப்பு வேலைகள்
12. கரையோரப் பாதுகாப்பும் பேணுகையும்
13. இரத்தினக்கல், ஆபரணக் கைத்தொழிலையும் வர்த்தகத்தையும் ஊக்குவித்தலும் ஒழுங்குறுத்துகையும்
14. சுற்றாடல் மாற்றங்கள் மற்றும் காபன் பயன்பாடு குறைந்த பொருளாதார மொன்றினைக் கொண்ட நிலைபேறான அபிவிருத்தியொன்றினை ஏற்படுத்துவதற்காகச் சட்டம் மற்றும் உபாய வழிமுறைகளை உருவாக்குதலும் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதலும்

*நிரல் II*

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்*

4. மகாவலி இணைந்த (பீ வலய புனரமைப்பு) கருத்திட்டம்
5. உடவளவ இடதுபக்க கரையோரக் கருத்திட்டம்
6. உமாஓயா அபிவிருத்திக் கருத்திட்டம்
7. வனப்பாதுகாப்புத் திணைக்களம்
8. மத்திய சுற்றாடல் அதிகாரசபை
9. புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகம்
10. வரையறுக்கப்பட்ட (GSMB) தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) கம்பனி
11. அரச மரக் கூட்டுத்தாபனம்
12. தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை
13. இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி நிறுவகம்
14. லங்கா ரிம்பர் பிளான்ட் அன்ட் இன்டஸ்ரீஸ்
15. கரையோர சூழல் பாதுகாப்பு அதிகாரசபை
16. கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம்
17. பொறியியல் அலுவல்கள் பற்றிய மத்திய ஆலோசனைப் பணியகம் மற்றும் அதன் துணைக் கம்பனிகளும் இணைக் கம்பனிகளும்
18. இலங்கை பொறியியலாளர்களின் மன்றம்

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- (1988 ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க) தேசிய மரபுரிமை கானக இடப்பரப்புகள் சட்டம்
- (1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க) தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைச் சட்டம்
- (2008 ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க) கடல் மாசடைதல் தடுப்புச் சட்டம்
- (1981 ஆம் ஆண்டின் 57ஆம் இலக்க) கரையோரப் பாதுகாப்புச் சட்டம்
- (2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) இலங்கைப் பொறியியலாளர்களின் மன்றச் சட்டம்
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டு வரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும்

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(2) மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 15. நிரல் II இல் உள்ள நிறுவனங்களுக்கு உரித்தாக்கப்பட்ட வேறெல்லா விடயங்களும் | | |
| 16. நிரல் II இல் உள்ள நிறுவனங்களின் கண்காணிப்பு | | |

***(3) நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர்***

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

1. தேசியக் கொள்கைத் திட்டமிடலுக்கும் அமைவாக அரச நிதி, வரிவிதிப்பு மற்றும் பொருளாதார அலுவல்கள் விடயங்களுக்கும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்
2. நிதி மற்றும் வருமானத்திற்குரிய தேசியக் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நெறிப்படுத்துதல்
3. அரசநிதி மற்றும் பாரியளவு நிதி முகாமைக் கொள்கைகளை வகுத்தமைத்தல்
4. வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரித்தலும் நிதி வளங்களின் முகாமையும்
5. தேசிய வரவுசெலவுத்திட்டத்தின் செயற்படுத்துகையும் வரவுசெலவு ரீதியான நிதிக் கட்டுப்பாட்டின் வினைப் படுத்துகையும்
6. தேசிய வரிக் கொள்கையின் முகாமையும் அரச வருவாயின் வினைத்திறனான பயன்பாடும்

*நிரல் II*

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்*

1. பொதுத் திறைசேரி
2. அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
3. தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்
4. பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களம்
5. அரச நிதித் திணைக்களம்
6. திறைசேரி நடவடிக்கைத் திணைக்களம்
7. அரச கணக்குகள் திணைக்களம்
8. வர்த்தகத் தீர்வைவரி மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம்
9. அபிவிருத்தி நிதித் திணைக்களம்
10. தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம்
11. நீதி அலுவல்கள் திணைக்களம்
12. உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
13. வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- ஒதுக்கீட்டுச் சட்டங்கள்
- (1998 ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க) பந்தயம்பிடித்தல், சூதாட்ட வரிச் சட்டம்
- (1956 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) சுங்கக் கட்டளைச் சட்டம்
- (2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) பற்றுக்கள் மீதான வரிச் சட்டம்
- (2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க)பொருளாதார சேவை அறவீட்டுச் சட்டம்
- (1891 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க) அரச சேவை பரஸ்பர சகாய நிதிச் சங்க கட்டளைச் சட்டம்
- (1989ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க) மதுவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டம்
- நிதிக் கம்பெனிகள் சட்டம் (1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க)

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**(3) நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர்** *(தொடர்ச்சி)*

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

7. அரச நிதி ஒழுங்குவிதிகளின் வினைப் படுத்துகை
8. திரட்டு நிதியத்தின் முகாமை
9. வருமான முகவராண்மை நிறுவனங்களின் முழுமையான மேற்பார்வை மற்றும் முகாமை
10. பொதுச் செலவினங்களின் முகாமை
11. அரசாங்கத்தின் கொள்வனவுகள் தொடர்பி லான மதியுரைச் சேவைகள்
12. திணைக்களங்கள் மற்றும் ஏனைய பொது நிதியத்தின் கண்காணிப்பு
13. அரச நிதிக் குழுவின் அறிக்கைகள் மீதான திறைசேரிக் குறிப்புகளைப் பேணுதல்
14. அரச ஆளணி முகாமை
15. தேசியக் கொள்கைகளுக்கு அமைவாக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தும் முன்னேற்ற மீளாய்வும் மற்றும் மதிப்பீடும்
16. இலங்கை மத்திய வங்கியுடனான ஒருங் கிணைப்பின் மூலம் நிதிக் கொள்கைகளைத் தயாரித்தல் மற்றும் பேரினப் பொருளாதார முகாமைத்துவமும்
17. வருமானத்தைத் ஒன்றுதிரட்டுதல் மற்றும் செலவு தொடர்பான தொடராய்வுகளை மேற்கொள்ளுதல்
18. திணைக்களங்களில் முகாமைத்துவக் கணக்காய்வு மேம்பாடு தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல்
19. வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக வலுவூட்டல் களை வழங்குதல்
20. தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயாரித்தல்
21. பொருளாதார அபிவிருத்தியில் தனியார் துறையின் பங்களிப்புக்கு வசதியளித்தலும் அரசாங்க மற்றும் தனியார் துறையினரிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதலும்

*நிரல் II*

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்*

14. முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம்
15. முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம்
16. கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வைத் திணைக்களம்
17. உள்நாட்டு அரசிறைத் திணைக்களம்
18. மதிப்பீட்டுத் திணைக்களம்
19. இலங்கைச் சுங்கம்
20. மதுவரித் திணைக்களம்
21. இலங்கைக் காப்புறுதிச் சபை
22. இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் மேற்பார்வைச் சபை
23. அரசசேவை பரஸ்பர சகாய நிதிச் சங்கம்
24. லோகோர் சீமாட்டி நிதியம்
25. வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு
26. இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
27. இலங்கை மத்திய வங்கி
28. சகல அரச வங்கிகளும் அதன் துணைக் கம்பனிகளும் இணைந்த நிறுவனங்களும்
29. இலங்கை பிணையங்கள் மற்றும் செலாவணி ஆணைக்குழு
30. இலங்கைக் கடன் தகவல் பணியகம்

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- (2000 ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க) நிதிக் குத்தகைச் சட்டம்
- (2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க) நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடுதல் சட்டம்
- (2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க) நிதி முகாமை (பொறுப்புடைமை) சட்டம்
- (2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க) உள்நாட்டு அரசிறைச் சட்டம்
- (2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க) காப்புறுதித் தொழில்துறை ஒழுங்கு படுத்துதல் சட்டம்
- (!951 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க) லோகோர் சீமாட்டி நிதியச் சட்டம்
- (1923 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க) உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம்
- (2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க) நாட்டைக் கட்டி யெழுப்புதல் வரிச் சட்டம்
- நிதி தூய்தாக்கலைத் தடுத்தல் சட்டம் (2006 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க)
- இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம் (1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க)
- (2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- (1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க) முத்திரை தீர்வைச் சட்டம்

## அட்டவணை *(தொடர்ச்சி)*

### (3) நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர் *(தொடர்ச்சி)*

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

22. தொடர்புடைய தேசிய நோக்கங்களை அடைவதற்காக தேசியத் திட்டமிடல் அதிகாரிகளுடன் ஒருமைப்பாட்டுக்கு வந்த காலப்பகுதி மற்றும் வரவுசெலவுடனான வளங்களின் அளவினுள் மேற்குறிப் பிட்டுள்ள கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைச் செயற்படுத்துதலும்
23. சிறந்த முறைமையுடன் வளங்களைப் பயன்படுத்தி அரச கொள்கைகள் செயற்படுத்தப்படுவதை உறுதிசெய்யக் கூடியதாக புதிய முகாமைத்துவ நுட்பமுறைகளைப் பயன்படுத்தி உகந்த திறமுறைகளைத் தயாரித்தல்
24. சர்வதேச முகவர் நிறுவனங்களுடனான கூட்டிணைப்பும் பொருளாதார அபிவிருத் திக்காக வெளிநாட்டு வளங்களைப் பயன்படுத்துதலும்
25. நிதி வழங்கும் நிறுவனங்கள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களுடனான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்
26. பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் உட்பட மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத் துவதற்காக உரிய வலுவூட்டல்களை வழங்குதல்
27. வருமான ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற் கான கொள்கைத் திட்டங்களை வகுத்தல் மற்றும் உரிய வலுவூட்டல்களை வழங்குதல்
28. அரச வங்கிகள் மற்றும் நிதி முகவராண்மைகளுக்குரிய முகாமைத்துவ அலுவல்கள்
29. காப்புறுதிப் பணிகளின் கட்டுப்பாடு
30. அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் மற்றும் அரச கம்பனிகளின் நிதிநிருவாகம்
31. பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் இலங்கை சான்றிதழ்பெற்ற முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனம் ஆகிய நிறுவனங்களின் கூட்டிணைப்புப் பணிகளும் வலுவூட்டலும்

*நிரல் II*

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்*

31. ஹொடேல் டிவலப்பர்ஸ் (லங்கா) தனியார் கம்பனி (PQ 143)
32. தேசிய லொத்தர் சபை
33. அபிவிருத்தி லொத்தர் சபை
34. தொகைமதிப்பு, புள்ளி விபரவியல் திணைக்களம்
35. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் அதன் துணைக் கம்பனிகளும் இணைந்த நிறுவனங்களும்
36. இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு
37. கொள்கைகள் கற்கை நிறுவனம்
38. தேசிய நடவடிக்கைகள் கூடம்
39. தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியம்
40. போராட்டம், கலவரம், சிவில் பிரச்சினை மற்றும் பயங்கரவாதம் தொடர்பான நிதியம்
41. மிலோதா நிறுவனம்
42. அரச முகாமைத்துவக் கூட்டுத்தாபனம்

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- (2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) பெறுமதிசேர் வரிச் சட்டம்
- (2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) சேமநல நன்மைகள் சட்டம்
- நிதிச் சட்டம் (1971 ஆம் ஆண் டின் 38 ஆம் இலக்க)
- சுற்றாடல் பாதுகாப்பு வரிச் சட்டம் (2008 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க)
- (2008 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சபைச் சட்டம்
- (1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிச் சட்டம்
- (1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க) நிதிசார் நீதிச் சட்டம்
- (1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க) இலங்கையின் பிணையங்கள் மற்றும் செலா வணி ஆணைக்குழுச் சட்டம்
- (1950 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க) குடிசன மதிப்பீட்டுச் சட்டம்
- இலங்கை கொள்கைகள் கற்கை நிறுவனச் சட்டம் (1988 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க)
- (1957 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க) வெளிநாட்டுக் கடன்கள் சட்டம்
- (2016 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க) நுண்நிதிச்சட்டம்
- (2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுச் சட்டம்

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**(3) நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |

**நிரல் I**

32. 2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்கச் சட்டத்தின்கீழ் பொதுத் திறைசேரியின் செயலாளருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள பின்வரும் நிறுவனங்களின் கீழுழைப்பு சொத்துக்களின் எழுச்சி தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அதிகாரிகளினால் நிறைவேற்றப்படும் செயற்பாடுகளைச் செயலாட்சி செய்தலும் கண்காணித்தலும்

i. ஹொடேல் டிவலப்பர்ஸ் (லங்கா) லிமிட்டட் (PQ143)
ii. புறக்கோட்டையில் அமைந்துள்ள சொத்துகள்- சாமர்ஸ் தானியக் களஞ்சியம்
iii. புறக்கோட்டை மற்றும் நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள சொத்துக்கள் - லங்கா ட்ரக்டஸ் லிமிட்டட்
iv. கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள சொத்துகள் - மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் முன்னர் அமைந்திருந்த காணி
v. பத்தரமுல்லையில் அமைந்துள்ள சொத்துகள் - சுச்சிர் நெப் புறஜெக்ட் பிறைவேட் லிமிட்டட்
vi. கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள சொத்துகள் - செலிங்கோ லெஸர் புறபட்டீஸ் லிமிட்டட்
vii. வரையறுக்கப்பட்ட பெல்வத்த சீனிக் கம்பனி
viii. வரையறுக்கப்பட்ட செவனகல சீனிக் கம்பனி
ix. பதுளையில் அமைந்துள்ள சொத்துக்கள் - கலம்பு கொமர்சல் கம்பனி
x. சினோரெக்ஸ் (லங்கா) லிமிட்டட்
xi. ஜக்கர் லங்கா லிமிட்டட்
xii. பிளய்மத் இன்டஸ்றீஸ் (பிறைவேட்) லிமிட்டட்
xiii. கொஸ்மொஸ் மெகீ இன்டஸ்றீஸ்
xiv. காபுல் லேஸ் (பிறைவேட்) லிமிட்டட்
xv. இன்ரறேட் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
xvi. சீத்தா பெசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
xvii. டி. சி. அபரல் (பிறைவேட்) லிமிட்டட்
xviii. நீடல் கிராப் (பிறைவேட்) லிமிட்டட்
xix. ஹாய் பெசன் காமன்ட் (பிறைவேட்) லிமிட்டட்

**நிரல் III**

- (2006 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க) கொடுப்பனவுகள் உபாய மோசடிகள் சட்டம்
- (1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க) தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம்
- (1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க) வங்கிச் சட்டம்
- (1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) வங்கிகள் மூலம் வழங்கப்படும் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- (2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க) பிரதேச அபிவிருத்தி வங்கிச்சட்டம்
- (1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க) அரச ஈட்டு முதலீட்டு வங்கிச்சட்டம்
- (1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்
- (2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியச் சட்டம்
- (2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க) கீழுழைப்பு செயற்பாட்டு தொழில்முயற்சிகள் அல்லது கீழுழைப்பு உபயோக சொத்துக்கள் எழுச்சிச் சட்டம்
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டு வரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும்

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(3) நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |

xx. கொலின்ஸ் காமன்ட் (பிறைவேட்) லிமிட்டட்

xxi. றுகுணு புத்தா அபரல் (பிறைவேட்) லிமிட்டட்

xxii. சஞ்ஜய காமன்ட் (பிறைவேட்) லிமிட்டட்

xxiii. மெக்பா அபரல் (பிறைவேட்) லிமிட்டட்

xxiv. யொஹீதா அசோசியேட்டஸ் (பிறைவேட்) லிமிட்டட்

xxv. டயனமிக் குளோதின் (பிறைவேட்) லிமிட்டட்

xxvi. 609 பொலிமர்ஸ் எக்ஸ்போட் (பிறைவேட்) லிமிட்டட்

xxvii. கொஸ்கோ பொலிமர் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்

xxviii. கிரேட் வோல் திறெட் மெனுபக்சரின் (பிறைவேட்) லிமிட்டட்

xxix. ஆதம்ஜீ எக்ஸ்றட்ஸன் (பிறைவேட்) லிமிட்டட்

xxx. டாட்டா பூட் (பிறைவேட்) லிமிட்டட்

xxxi. றெண்டன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்

xxxii. ரிகான் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்

xxxiii. கொம்பொசிட் ரவர் சொலியூசன் (பிறைவேட்) லிமிட்டட்

xxxiv. ஹெல்த் பூட் புரடக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

xxxv. சிறி சிராக் (பிறைவேட்) லிமிட்டட்

xxxvi. றோயல் எக்ஸ்போட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

xxxvii. கொன்டிநென்டல் வனஸ்பதி (பிறைவேட்) லிமிட்டட்

33. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்கான நடவடிக்கைகளும்

34. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல்

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

*(4)* **போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்**

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

1. போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடலும்
2. புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒன்றிணைந்த பயணிகள், பண்டப் புகையிரதப் போக்குரத்து சேவைகளை வினைத்திறமையாக நடாத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தலும் புகையிரத உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தியும் புகையிரத சேவைகளை வழங்கலும்
3. பயணிகளுக்கு படகுத்துறைச் சேவைகளை வழங்கல்
4. பாதுகாப்பானதும் நம்பகத்தகுந்ததுமான பயணிகள் போக்குவரத்துச் சேவைகளை வழங்குதல்
5. சூழல் நேயமிக்க போக்குவரத்து முறைமையொன்றை அறிமுகப்படுத்துதல்
6. தனியார் போக்குவரத்துச் சேவைகளை ஒழுங்குபடுத்தல்
7. புதிய புகையிரதப் பாதைகளை நிர்மாணித்தல், இருக்கின்ற புகையிரதப் பாதைகளை விரிவாக்குதலும் அதற்குரிய காணிகளை கையகப்படுத்துதலும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி உட்பட அனைத்து நடவடிக்கைகளும்
8. மோட்டார் வாகனங்களின் பதிவும், அனுமதிப்பத்திரங்களை வழங்கலும்
9. சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல்
10. மோட்டார் வாகனங்களுக்கு உரிய சட்டதிட்டங்கள் மற்றும் வழிகாட்டி நெறிகளை வழங்குதலும் ஒழுங்குபடுத்தலும்

*நிரல் II*

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்*

1. இலங்கை புகையிரதத் திணைக்களம்
2. இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை
3. தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்
4. மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்
5. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு
6. வரையறுக்கப்பட்ட லக்திவ பொறியியல் கம்பனி
7. வரையறுக்கப்பட்ட வேரஹர பொறியியல் சேவைகள் கம்பனி (WESCO)
8. சிவில் விமான சேவைகள் அதிகாரசபை
9. வரையறுக்கப்பட்ட விமானநிலைய, விமானசேவைகள் (ஸ்ரீலங்கா) கம்பனி
10. வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் எயார் லயின் மற்றும் அதன் துணைக் கம்பனிகள்
11. வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- (1950ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) புகையிரதச் சட்டம்
- (2005 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க) இலங்கைப் போக்குவரத்துச் சபைச் சட்டம்
- (1997ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க) தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகச் சட்டம்
- (1951 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) மோட்டார் வாகன போக்குவரத்துச் சட்டம்
- (1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க) தேசிய போக்குவரத்து ஆணைக் குழுச் சட்டம்
- (1983 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க) தனியார் (பேருந்து) சேவைகள் சட்டம்
- இலங்கை சிவில் விமானசேவைகள் அதிகாரசபைச் சட்டம் (2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க)
- (2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) சிவில் விமானச் சேவைகள் சட்டம்
- (1982 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க) வான்செலவு (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டு வரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும்

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

(4) **போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 11. சர்வதேச மற்றும் உள்ளூர் விமானநிலையங்களின் அபிவிருத்தியும் ஒழுங்குறுத்துகை நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் | | |
| 12. விமான நிலையங்களில் ஆற்றப்படும் சேவைகளின் முன்னேற்றம், கட்டணங்கள் மற்றும் பண்புத்தரம் என்பவற்றை ஒழுங்குபடுத்தல் | | |
| 13. சர்வதேச விமானப் பிரயாணங்களை விரிவுபடுத்துவதற்காக ஏனைய நாடுகளுடன் ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளல் அடங்கலாக தேவையான ஏனைய நடவடிக்கைகள் | | |
| 14. இலங்கையின் விமான நிலையங்களை வெளிநாடுகள் பயன்படுத்துவதற்குரிய முன்னேற்றமும் ஒழுங்குபடுத்தலும் | | |
| 15. தேசிய விமானப் பயணங்களை முன்னேற்றுதல் | | |
| 16. தனியார் விமானப் பிரயாண சேவைகளைக் கண்காணித்தலும் ஒழுங்கு படுத்தலும் | | |
| 17. வானூர்திகளைப் பதிவு செய்தல் | | |
| 18. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | |
| 19. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

(5) **மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி பற்றிய விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள நிறுவனங்களின் விடயங் களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களை யும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும் | 1. கிராமிய சமுதாய அபிவிருத்தி (இளைஞர் வலுவூட்டுகை) கருத்திட்டம்<br>2. தோட்டத்துறை சுயதொழில் சுழற்சி நிதியம்<br>3. பெருந்தோட்ட வீடமைப்பு அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு | • வேறேதேனும் அமைச்சரொரு வரின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாகக் கொண்டு வரப்படாத வையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்ட வையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**(5) மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br>*கடமைகளும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| 2. அரச மற்றும் தனியார் பெருந்தோட்டக் கம்பனிகளில் சேவையாற்றும் காணிகள் இல்லாத மக்களுக்காக வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் புதிய கிராமங்களையும் நகரங்களையும் உருவாக்குதல்<br>3. தோட்டத்துறையைச் சேர்ந்த மக்களை வலுவூட்டுவதற்காக வாழ்வாதார முறைகளை உருவாக்குதலும் சமுதாய அபிவிருத்திக் கருத்திட்டங்களைச் செயற்படுத்துதலும்<br>4. தோட்டத்துறையைச் சார்ந்த மக்களை பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியில் உயர்நிலைக்குக் கொண்டுவரும் நோக்கில் அடிப்படை வசதிகள் உள் ளிட்ட ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான நடவடிக்கை எடுத்தல்<br>5. கிராமியத் தோட்டப் பிரிவுகளின் உட்கட்ட மைப்பு வசதிகளை விருத்திசெய்தல்<br>6. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்- பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்கான நடவடிக்கைகளும்<br>7. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | 4. சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் | |

**(6) மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்**

| *நிரல் I*<br>*கடமைகளும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| 1. மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து மத அலுவல்கள் தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் என்பவற் றின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடலும் | 1. மீள்குடியேற்ற அதிகாரசபை<br>2. ஆட்கள், ஆதனங்கள், கைத்தொழில்கள் புனர்வாழ்வளிப்பு அதிகாரசபை<br>3. புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் அலுவலகம்<br>4. இந்து மத, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் | • (2007ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க) மீளக்குடியமர்த்துதல் அதிகாரசபைச் சட்டம்<br>• (1987ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க) ஆட்களையும் ஆதனங் களையும் கைத்தொழில்களையும் புனரமைத்தல் அதிகாரசபைச் சட்டம்<br>• இந்து பண்பாட்டு நிதியச் சட்டம் (1985 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(6)*** **மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்** *(தொடர்ச்சி)*

*நிரல் I*
*கடமைகளும் பணிகளும்*

2. முறுகல்நிலை காரணமாக இடம்பெயர்ந்த பொதுமக்களை மீளக் குடியமர்த்துவதற்கான அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் செயற்படுத்துதலும் செயலாட்சி செய்தலும்

3. முறுகல்நிலை காரணமாக உடல், உள ரீதியான பாதிப்புக்குள்ளான ஆட்களை புனர்வாழ்வளிப்பதற்கும் மீளக் குடியமர்த்துவதற்கும் உரிய நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் செயற்படுத்துதல்

4. மீள்குடியேற்ற நடவடிக்கைகளின்போது அரசாங்கத்திற்கும் கொடைவழங்கும் முகவராண்மைகளுக்கும் அரச சார் பற்ற அமைப்பாண்மைகளுக்கும் சிவில் சமூகத்திற்கும் இடையிலான நடவடிக் கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல்

5. இடம்பெயர்ந்தோருக்கான அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்குரிய நடவ டிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல்

6. மோதல்களினால் சேதத்திற்கு உட்பட்ட ஆதனங்களையும் ஆட்களையும் புனரமைப்புச் செய்வதற்குத் தேவை யான நடவடிக்கைகளை எடுத்தல்

7. பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டிருந்தோரை மீள சமூகத்தோடிணைப்பதற்கான உபாயமுறைகளைச் செயற்படுத்துதல்

8. ஒழுக்கப் பண்பாடுகளைக்கொண்ட சமூகத்தை உருவாக்கும்பொருட்டு சமயத்தின் பெறுமதிகளை மக்களிடையே வளர்க்கும் கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் என்பவற்றை வகுத்தமைத்தல்

9. இந்து மத, பண்பாட்டு அலுவல்கள் தொடர்பிலான நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும்

*நிரல் II*
*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்*

5. பனை அபிவிருத்திச் சபை

6. நோர்த் சீ லிமிட்டட்

*நிரல் III*
*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும்

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**(6) மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br>*கடமைகளும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| 10. மோதல் மற்றும் நெருக்கடி நிலவிய மாகாணங்களின் மக்களுக்கு புனர் வாழ்வளிப்பு மற்றும் மீள்குடியேற்று வதற்கான பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம் படுத்தும் அரசாங்கத்தின் நிகழ்ச் சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங் களுக்கு உரியவாறான கொள்கை களைத் தயாரித்தல், நடைமுறைப் படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் | | |
| 11. வடக்கு மாகாண அபிவிருத்தி செயல்நெறிகளைக் கூட்டிணைத்தலும் கண்காணித்தலும் | | |
| 12. நிரல் II இல் தரப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு உரித்தாக்கப்பட்ட வேறெல்லா விடயங்களுக்குரிய அலுவல்கள் | | |
| 13. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**(7) துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்**

| *நிரல் I*<br>*கடமைகளும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| 1. துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் தொடர்பான விடயங் களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங் களுடனும் தொடர்புபட்ட கொள்கை களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும் | 1. இலங்கை துறைமுக அதிகாரசபையும் அதன் துணைக் கம்பனிகளும் இணைக் கம்பனிகளும் | • இலங்கை கப்பற்றொழிற் கூட்டுத்தாபனச் சட்டம் (1971 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க) |
| 2. வர்த்தக துறைமுகங்களை அபிவிருத்தி செய்தலும் முகாமைசெய்தலும் | 2. வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனமும் அதன் துணைக் கம்பனிகளும் இணைக் கம்பனிகளும் | • (1908 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க) துறைமேடை துப்புரவாக்குதல் மற்றும் ஆக்கவுரிமைச் சிட்டைக் கட்டளைச் சட்டம் |
| 3. கப்பற்படையாட்சித்துறைக்குச் சொந்தமானவை தவிர்ந்த ஏனைய துறைமுகங்களினதும் வெளிச்சவீடுகள் கலங்கரை விளக்கங்களினதும் எண்ணெய் தாங்கி அமைவுகளினதும் உபகரணங்களினதும் அபிவிருத்தியும் நிருவாகமும் | 3. வாணிப கப்பற்றுறை செயலாளர் நாயகத்தின் அலுவலகம் | • (1972ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க) கப்பற்றொழில் முகவர்களுக்கு உரிமமளித்தல் சட்டம் |
| | 4. வரையறுக்கப்பட்ட கப்பற்றுறை மற்றும் விமானசேவைகள் தகவல், ஆராய்ச்சி தனியார் கம்பனி | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**(7) துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்** *(தொடர்ச்சி)*

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

4. கப்பற்சேவை வழங்குநர்கள், பாவனையாளர்கள் ஆகியோருக்கிடையிலான பிணக்குகளைத் தீர்த்தல்
5. கப்பற்சேவைகளுக்கான போட்டி விதிகளைத் விதித்தல்
6. கப்பற்சேவை வழங்குநர்கள், பாவனையாளர்கள் ஆகியோருக்கிடையில் ஆலோசனைகளுடனான கூட்டிணைப்பை உறுதிப்படுத்துதலும் ஆதரவளித்தலும்
7. கப்பற்சேதங்களின் பெறுகையும் சமுத்திரப் பொருள் மீட்புகளும்
8. கப்பற்றுறை அபிவிருத்தி நிதியத்தின் நிருவாகம்
9. கப்பற் கட்டணங்களும் கப்பற்சேவை அலுவல்களும்
10. கரையோரம் சார்ந்த பயணிகள் போக்குவரத்து
11. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்-பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள்
12. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல்

*நிரல் II*

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்*

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- (1865 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க) கப்பல் உதவியாளர்கள் கட்டளைச் சட்டம்
- (1971ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க) வணிகக் கப்பற்றுறைச் சட்டம்
- (1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க) இலங்கை துறைமுக அதிகாரசபைச் சட்டம்
- (1900 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) படகுகள் கட்டளைச் சட்டம்
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டு வரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும்

**(8) வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்**

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

1. வெளிநாட்டலுவல்கள் பற்றிய விடயம் தொடர்பில் நிரல் II இல் தரப்பட்டுள்ள நியதிச்சட்ட நிறுவனங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடலும்

*நிரல் II*

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்*

1. வெளிநாடுகளிலுள்ள தூதராண்மைக் குழுக்கள்
2. லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் திறமுறை கற்கை நிறுவனம்
3. தேசிய கடல்சார் செயற்குழுச் செயலகம்

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- (1981 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க) காவற்தூதுப் பணிகள் சட்டம்
- (1996 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க) அரச தூதராண்மை சிறப்புரிமைகள் சட்டம்

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**(8) வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 2. வெளிநாடுகளில் இலங்கையின் பிரதிமையை உயர்த்துவதன்மூலம் இலங்கைக்கு உச்சக்கட்ட சர்வதேச ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ளக் கூடியதாக வெளிநாடுகளுடன் இராஜதந்திர உறவுகளைப் பேணுதல் | | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டு வரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 3. இலங்கைபற்றி சாதகமான பிரதிமையைக் கட்டியெழுப்புவதற்காகச் செயற்படுதலும் சர்வதேச ரீதியாக சாட்டப்படும் எதிர்பிரசாரங்கள் குறித்து உரியவாறு பதிலளித்தலும் | | |
| 4. வெளிநாடுகளுடன் தூதராண்மை உறவுகளைப் பேணுதலும் சட்டவாக்கங்கள், உடன்படிக்கைகள் மற்றும் சமவாயங்கள் குறித்த கலந்துரையாடல்களும் | | |
| 5. தூதராண்மைக் காப்புரிமைகளையும் சிறப்புரிமைகளையும் பெற்றுக்கொடுத்தல் | | |
| 6. வெளிநாட்டு வர்த்தக முதலீடு மற்றும் சுற்றுலா நடவடிக்கைகளையும் மேம்படுத்துவதில் உதவியளித்தல் | | |
| 7. இலங்கையின் வெளிநாட்டு சேவை மற்றும் வெளிநாட்டு தூதராண்மைச் சபைகளுக்கு இணைப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்களின் நிருவாக மற்றும் தொழில்வாண்மை இயலளவினை அதிகரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தல் | | |
| 8. புவியியல்ரீதியான அரசியல் போக்குகளை கற்றாராய்ந்து இலங்கைக்குச் சாதகமான விதத்தில் அந்தப் போக்குகளை முகாமைசெய்வதற்கு வேண்டிய உபாயமுறைகள் பற்றி அரசுக்கு ஆலோசனை வழங்குதல் | | |
| 9. வெளிநாடுகளில் வாழுகின்ற இலங்கையர்களின் நலனோம்புகைக்காக வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**(8) வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| நிரல் I<br>கடமைகளும் பணிகளும் | நிரல் II<br>திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும் | நிரல் III<br>நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
|---|---|---|
| 10. கொன்சியுலர் சேவைகளை வழங்குதல் | | |
| 11. இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாடு மற்றும் கடல்சார் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக வேண்டிய வெளி நாட்டு உறவுகளை உறுதிப்படுத்தல் | | |
| 12. தேசியப் நல்லிணக்கத்துக்குரிய பொறிமுறைபற்றி ஐக்கிய நாடுகளின் அமைப்பு உள்ளிட்ட சர்வதேச நாடுகளுடன் செயற்படுதல் | | |
| 13. சர்வதேச மற்றும் பிராந்திய அரசியல், பொருளாதார, சுற்றாடல், சமூக மற்றும் கலாசார அமைப்புகளுடன் முனைப்பாகச் செயற்படுதல் | | |
| 14. தேசியக் கொள்கைகளுக்கமைவாக இலக்குகளை அடைந்து கொள்ளு முகமாக பொருளாதாரச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைத்தலும் ஒருங்கிணைத்தலும் | | |
| 15. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்-பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | |
| 16. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**(9) கமத்தொழில் அமைச்சர்**

| நிரல் I<br>கடமைகளும் பணிகளும் | நிரல் II<br>திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும் | நிரல் III<br>நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
|---|---|---|
| 1. கமத்தொழில் தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும் | 1. கமத்தொழில் திணைக்களம்<br>2. கமநல அபிவிருத்தித் திணைக்களம்<br>3. தேசிய உரச் செயலகம்<br>4. கமத்தொழில் மற்றும் கமநல சேவைகள் காப்புறுதிச் சபை<br>5. உணவு ஆணையாளர் திணைக்களம் | • (1972ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க) கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகச் சட்டம்<br>• (1980ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க) பீடைக் கொல்லிகள் கட்டுப்பாட்டுச் சட்டம்<br>• (1951 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க) மரங்களை வெட்டிச் சாய்த்தல் (கட்டுப்பாட்டுச்) சட்டம் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(9)* கமத்தொழில் அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br>*கடமைகளும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| 2. உள்நாட்டு உணவுகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் | 6. தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை | • (1973 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபைச் சட்டம் |
| 3. நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கமத்தொழில் ரீதியான உற்பத்தியையும் உற்பத்திப் பெருக்கத்தையும் மேம்படுத்தத் தேவையான உபாயவழிகளையும் திட்டங்களையும் வகுத்தமைத்தல் | 7. பயறு வகை, தானிய ஆராய்ச்சி, உற்பத்தி அதிகாரசபை | • (1999 ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க) தாவர பாதுகாப்புச் சட்டம் |
| 4. பயிர் பல்வகைப்படுத்துகையின் அடிப்படையிலான கமத்தொழில் உற்பத்திகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் | 8. ஹெக்டர் கொப்பேகடுவ கமத்தொழில் ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம் | • (2003 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க) விதைநெல் சட்டம் |
| 5. பல்வேறு கமத்தொழில் துறைகளில் ஈடுபடுவோருக்கு முறைசார் பயிற்சியளித்தலும் கல்விசார் ஆராய்ச்சி வாய்ப்புக்களை விஸ்தரிப்பதற்கான திறமுறைகளை வகுத்தமைத்தலும் | 9. இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான மன்றம் | • (1996 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) மண்வளம் பேணல் சட்டம் |
| 6. கமத்தொழில் உற்பத்திகளின் பெறுமதிகளை மேம்படுத்துவதற்கான திறமுறைகளை அறிமுகப்படுத்துதல் | 10. பின் அறுவடைத் தொழில்நுட்பவியல் நிறுவகம் | • (1987ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க) இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைக்கான பேரவைச் சட்டம் |
| 7. கமத்தொழிலின் அடிப்படையிலான தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்தலும் சந்தை வாய்ப்புக்களை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தலும் | 11. வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி | • (1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க) உரவகைகளை விதிமுறைப்படுத்தற் சட்டம் |
| 8. உள்நாட்டு கமத்தொழில் உற்பத்திகளின் பண்புரீதியான பெறுமதிகளை பாவனையாளர்களான நுகர்வோருக்கு உறுதிப்படுத்துவதற்குரிய திறமுறைகளைத் தயாரித்தல் | 12. கொழும்பு கொமர்ஷல் பசளைக் கம்பனி | • (2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) கமநல அபிவிருத்திச் சட்டம் |
| 9. வயல்காணிகள் தொடர்பான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல் | 13. வரையறுக்கப்பட்ட ஜனதா பர்டிலய்ஸர் என்டபிறய்சஸ் | • (1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) நெல் சந்தைப்படுத்தல் சட்டம் |
| 10. விவசாய மக்களின் நலன்புரி சேவைகளைத் திட்டமிடுதலும் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் | 14. வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட் கம்பனி | • (1978 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) கமத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டம் |
| 11. பண்புரீதியான தரத்தைக்கொண்ட உரவகைகளை இறக்குமதி செய்தலும் மற்றும் விநியோகத்தின்மூலம் உரமானிய நிகழ்ச்சித்திட்டங்களை வினைத்திறமையுடன் செயற்படுத்துதலும் | 15. நெல் சந்தைப்படுத்தல் சபை | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| | 16. தேசிய கமத்தொழில் பல்வகைப் படுத்துகையும், குடியேற்ற அதிகாரசபையும் (ஹதபிம) | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(9) கமத்தொழில் அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 12. இலங்கை கமத்தொழில் சேவையின் நிருவாகமும் ஆளணி முகாமையும் | | |
| 13. ஐக்கிய நாடுகளின் உணவு, கமத்தொழில் அமைப்பாண்மையுடன் தொடர்புபட்ட பணிகள் | | |
| 14. மரக்கறி அபிவிருத்திச் சபை மற்றும் பழங்கள் அபிவிருத்திச் சபை என்பனவற்றின் சொத்துக்கள் மற்றும் ஏனைய வளங்களுக்குரிய அலுவல்கள் | | |
| 15. சேதனப் பசளை உற்பத்தி மற்றும் நச்சுத்தன்மையற்ற விவசாயத்தைப் பரவலாக்குதல் | | |
| 16. கமத்தொழில் அபிவிருத்தி வலயங்கள், கமத்தொழில் கிராமங்கள் மற்றும் நிலைபேறான வீட்டுத்தோட்டச் செய்கை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றைப் பரவலாக்குதல் | | |
| 17. நெல், தானியங்கள் மற்றும் ஏனைய கமத்தொழில் உணவுப்பொருட்களைக் கொள்வனவு செய்தல், களஞ்சியப் படுத்துதல், பதனிடுதல் மற்றும் சந்தைப் படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் | | |
| 18. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்-பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | |
| 19. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

***(10) மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்***

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
